**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இந்திய தேசியம் பற்றிப் பாடிய கவிஞர்கள் யாவர்?
2. பாரதிதாசனின் இயற்கைப் பாடல்களின் தொகுப்பு யாது?
3. நாமக்கல் கவிஞர் யாருடைய படங்களை எல்லாம் ஓவியமாக வரைந்துள்ளார்?
4. 'கையும் காலும்தானே மிச்சம்' என்ற பட்டுக்கோட்டையார் பாடலுக்கான பதில் என்ன?
5. கண்ணதாசனின் இரு காவியங்களின் பெயர்களை எழுதுக.
6. ந. பிச்சமூர்த்தி கவிதைகளின் வாழ்வியல் பற்றிய கோட்பாடு என்ன?
7. மீராவின் ஊசிகள் கவிதைத் தொகுப்பின் பாடுபொருளை எழுதுக.
8. உடல் உறுப்புக்களைப் புகழும் நோக்கில் இயற்றப் பெற்ற சிற்றிலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. பெண்கள் மடல் ஏறும் நிகழ்ச்சி இலக்கியத்தில் எப்போது காட்டப்படும்?
10. நந்திக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
11. இசை நாடகச் சிற்றிலக்கியங்கள் இரண்டினைக் கூறுக.
12. உலா இலக்கியத்தின் முதல் நூல் எது? ஆசிரியர் யார்?
13. பள்ளி எழுச்சி என்ற இலக்கிய வகை எந்தத் துறையிலிருந்து தோன்றியது?
14. பாவேந்தர் பிள்ளைத்தமிழைப் பாடியவர் யார்?
15. இரு பரணி நூல்களின் பெயர்களை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. புதுக்கவிதை – விளக்கம் தருக.
2. பாரதிதாசனின் சாதீயம் பற்றிய இரு சிந்தனைகளை எழுதுக.
3. தொழிலாளி பற்றி முடியரசன் கூறும் மூன்று கருத்துகளை எழுதுக.
4. பாரதியாரின் தேசிய உணர்வு வெளிப்படுகின்ற ஒரு பாடலை எழுதுக.
5. மடலேறுதல் என்றால் என்ன?
6. பள்ளு இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றி குறிப்பிடுக.
7. அகப்பொருள் கோவை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
8. தஞ்சைவாணன் ஆட்சி செய்த பகுதி எது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பாவேந்தர் பாரதிதாசன் பாடல் வழி புலப்படும் பொதுவுடைமைச் சிந்தனைகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் பெண் உரிமைச் சிந்தனைகளை விவரிக்க.

2. (அ) கண்ணதாசன் பாடல்களில் புலப்படும் காதல், சோகம், தத்துவம் முதலிய கருத்துக்களை ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருக்காவலூர்க் கலம்பகத்தின்வழி அடைக்கல மாதாவின் பெருமைகளை எழுதுக.

3. (அ) சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சரபேந்திர பூபாலக் குறவஞ்சியின் உள்ளடக்கத்தின் சிறப்பினை விவரிக்க.

***